# ජාතික පොලිස් කොමිෂන් සභාව

## தேசிய பொலிஸ் ஆணைக்குழு

## National Police Commission

# වාර්ෂිකවාර්තාව

## ஆண்டறிக்கை

## Annual Report

# 2017

## செயல்நோக்கு

" நம்பகமானதும் சுயாதீனமானதும் தொழில் ரீதியானதுமான பொலிஸ் சேவையொன்றின் மூலம் பாதுகாப்பான, இடரற்ற அமைதியான ஒரு சமூகம்"

## செயற்பணி

மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து மற்றும் பாதுகாத்து பொதுமக்களுக்கான பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும் சட்டவாட்சியை நிலைநிறுத்தக்கூடிய வினைதிறன்மிக்க வெளிப்படைத்தன்மையுள்ள பொதுமக்களின் அபிலாஷைகளுக்கு பதிலளிக்கும் சேவையாக இலங்கை பொலிஸ் சேவையை மாற்றுதல்"

## பெறுமானங்கள்

சுயாதீனம்

நேர்மை

பொறுப்புக்கூறல்

ஒத்துழைப்பு

தொடர்ச்சியான கற்றல்

படைப்பாற்றல்

# உள்ளடக்கம்


| | பக்க இலக்கம் |
|---|---|
| 1. முன்னுரை | 3 |
| 2. ஆணைக்குழுவின் அமைப்பு | 4 |
| 3. ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள் | 5 |
| 4. ஆணைக்குழுவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பிரிவுகள் மற்றும் அவற்றின் மூலம் ஆற்றப்படும் பணிகள் | 6 |
| 4.1 நிர்வாகம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு | 7 |
| 4.2 பொதுமக்கள் முறைப்பாட்டு விசாரணைப் பிரிவு | 23 |
| 4.3 தாபன மற்றும் ஒழுக்காற்றுப் பிரிவு | 25 |
| 4.4 கொள்கைகள், சட்டம் மற்றும் மேன்முறையீட்டுப் பிரிவு | 29 |
| 4.5 நிதிப் பிரிவு | 30 |

- ❖ பின்னிணைப்பு 01 – தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் மாகாணப் பணிப்பாளர் அலுவலகங்களின் முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் 34
- ❖ பின்னிணைப்பு 02–பொதுமக்கள் முறைப்பாடுகள் விசாரணை நடைமுறை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்

# 1. முன்னுரை

அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி புதிதாக நிறுவப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்ட தேசிய பொலிஸ் ஆணைக்குழு 2017 ஆம் ஆண்டில் தனது இரண்டாவது வருடத்தை நிறைவுசெய்துள்ளது. 2016 ஆம் ஆண்டில் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் பௌதீக மற்றும் பௌதீக வளங்கள் அல்லாத விடயங்கள் தொடர்பில் எழுந்த தடைகள் அனைத்தையும் வெற்றிகொண்டு முற்போக்கான பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதற்கிணங்க,பொலிஸ் ஆணைக்குழுவினால் அதன் பணிகளை நிறைவேற்றும் பொருட்டு தேவையான மனிதவளம் மற்றும் வேறு வளங்களை ஈடுபடுத்துவதற்கு தேவையான நிறுவனக் கட்டமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டு பொலிஸ் ஆணைக்குழுவினால் இலங்கை பொலிஸ், சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சு, சட்டத்தை அமுல்படுத்துவதில் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புள்ள வேறு அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் பங்கேற்புடன் பங்குதாரர்களின் வலையமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் மற்றும் வேறு தரப்புக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்காக திட்டமிடப்பட்ட பல்வேறுபட்ட நடவடிக்கைகள் மற்றும் தலையீடுகள் பற்றிய தகவல்களை வழங்குவதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அத்தோடு, பொதுமக்களுக்கு தரமான மற்றும் வினைத்திறனுள்ள பொலிஸ் சேவையை வழங்கும் பொருட்டு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அதாவது,பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான தெடர்பை விருத்தி செய்தல், உயர் வெளிப்படைத்தன்மைக்காக பொதுமக்கள் கருத்தறிதல் மற்றும் தரப்பினர்களின் பங்கேற்பைப் பெற்றுக்கொள்ளல் என்பன இத்திட்டங்களில் உள்ளடக்கப்பட்டன.

பொதுமக்களின் நன்மைக் கருதி பொதுமக்கள் நட்புமிகு பொலிஸ் சேவையொன்றை உருவாக்கும் நோக்கில் மீளாய்வுக்குரிய 2017 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் செயலாற்றுகை பற்றிய தகவல்கள் 2017 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றன. அதற்கிணங்க, நல்லாட்சிக் கோட்பாடுகளை அடைந்துகொள்வதை உறுதிப்படுத்தும் முகமாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அதன் பரந்துபட்ட இலக்குகள் மற்றும் நோக்கங்கள் முன்வைக்கப்பட்டன. இங்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் மற்றும் இலங்கை பொலிஸின் பிரதிவிம்பத்தை மற்றும் நம்பிக்கையை படிப்படியாக விருத்தி செய்து சேவைக்கு அர்ப்பணிப்புள்ள ஆணைக்குழு ஆளணியினர், இலங்கை பொலிஸ், வெகுசன ஊடகங்கள், பொதுமக்கள் மற்றும் பிரதான பங்குதாரர்களின் ஒத்துடைப்புடன் இந்த நாட்டில் பொதுமக்கள் நேயம்மிக்க பொலிஸ் சேவையொன்றை ஸ்தாபிப்பதற்கான பின்னணியை உருவாக்கும் பொருட்டு தொடர்ச்சியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

## 2. ஆணைக்குழுவின் அமைப்பு

**தவிசாளர்:**

சட்டத்தரணி

திரு. பி.எச்.மனதுங்க

### ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் :

1. பேராசிரியர் திரு எஸ்.ரீ. ஹெட்டிகே
   சமூக விஞ்ஞானத்துறை பேராசிரியர்
2. சட்டத்தரணி
   திருமதி சாவித்திரி டி விஜேசேகர
3. திரு. பீ.ஏ.ஜெயநாதன்
   ஓய்வுபெற்ற பிரதி பொலிஸ்மா அதிபர்
4. திரு. வை.எல்.எம்.சவாஹிர்
   முன்னாள் தூதுவர்
   இலங்கை வெளிநாட்டுச் சேவை
5. திரு. திலக் கொல்லுரே
   முன்னாள் அமைச்சுச் செயலாளர்
   இலங்கை நிர்வாக சேவை
6. திரு. பிரேன்க் டி சில்வா
   ஓய்வுபெற்ற பொலிஸ்மா அதிபர்

### செயலாளர் :

**திரு. டி.எம்.எஸ். திஸாநாயக்க**

இலங்கை நிர்வாக சேவை தரம் 1

## 3. ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள்

அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின் 155எ(1)(அ) பிரிவின் பிரகாரம் பொலிஸ் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பின்வருமாறு :

1. பொலிஸ்மா அதிபர் தவிர்ந்த ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்களின்நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் செய்தல்.
2. பொலிஸ் உத்தியோகத்தரொருவருக்கோ அல்லது பொலிஸ் சேவைக்கோ எதிராக பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் மற்றும் அதிருப்திக்குள்ளாகும் எவரேனும் ஒருவரால் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகளை ஏற்றல் மற்றும் அவற்றை விசாரணை செய்தல் மற்றும் சட்டத்தின் பிரகாரம் அவற்றுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஆணைக்குழுவினால் நடைமுறை விதிகளை ஆக்குதல்.

பின்வரும் விடயங்களையும் உள்ளடக்கிய வகையில் பொலிஸ் உத்தியோகத்தர்களின் சகல நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆணைக்குழு பொலிஸ்மா அதிபருடன் கலந்துரையாடி தீர்மானங்களுக்கு வருதல் வேண்டும் :

(அ) ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு மற்றும் இடமாற்றங்கள் தொடர்பிலான திட்டங்களை,அவை தொடர்பில் அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்ட கொள்கைக்கு அமைவாக வகுத்தமைத்தல்.

(ஆ) பயிற்சியளித்தல் மற்றும் பொலிஸ் சேவையின் வினைத்திறனையும் சுதந்திரத்தையும் மேம்படுத்தல்

(இ) தேசியப் பிரிவினதும் மாகாண பிரிவுகளினதும் பயன்பாட்டுக்கு அவசியமான ஆயுதங்கள், வெடிமருந்துகள், மற்றும் வேறு உபகரணங்கள் ஆகியவற்றின் தன்மையும் வகையும் அத்துடன்

(ஈ) நடத்தை பற்றிய கோவைகள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைமுறைகளை தயாரித்தல்.

அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையின் 1 ஆவது பின்னிணைப்பின் கீழ் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சகல அதிகாரங்களையும் நடைமுறைப்படுத்தல் மற்றும் சகல பணிகளையும் மற்றும் கடமைகளையும் நிறைவேற்றுதல் என்பன ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 4. ஆணைக்குழுவில் தாபிக்கப்பட்டுள்ள பிரிவுகள் மற்றும் அலகுகள்

மேற்கூறப்பட்ட அதிகாரங்களை மற்றும் பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் பின்வரும் செயலூாக்கமுள்ள பிரிவுகள் மற்றும் அலகுகள் நிறுவப்பட்டுள்ளன. இந்த ஒவ்வொரு பிரிவிற்கும் தனியான கடமைகள் பொறுப்பளிக்கப்பட்டுள்ளன.

1. நிர்வாகம், ஆராய்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு
2. பொதுமக்கள் முறைப்பாடுகள் விசாரணைப் பிரிவு
3. தாபன மற்றும் ஒழுக்காற்றுப் பிரிவு
4. கொள்கை, சட்டம் மற்றும் மேன்முறையீட்டுப் பிரிவு
5. நிதிப் பிரிவு

## 4.1. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் நிர்வாக, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் வெளிவாரியான பிரவேச நடவடிக்கைகள்

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பிரதான பணிகள் மற்றும் நிர்வாகம், ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் வெளிவாரி பிரவேச பணிகளின் கீழ் நிறுவன கொள்திறன் அபிவிருத்தி ஆகிய இரு வகைப் பணிகளுக்காக தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஆளணியை நியமிக்கின்றது. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பல்வேறுபட்ட நாடளாவிய சேவைகளுக்கும் இணைந்த சேவைகளின் சிவில் சேவை உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்படுகின்றனர். அவர்களிலிருந்து தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுகின்றனர். மேலும், ஊடக உத்தியோகத்தர்,தரவுப் பதவியுனர ஆகியோர் பொலிஸ் ஆணைக்குழுவுக்கு உள்ளக ரீதியில் நேரடியாக ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர். சகல சந்தர்ப்பங்களிலும் சுயாதீனமான மற்றும் பக்கச்சார்பற்ற தீர்மானங்களை வழங்கும் பொருட்டு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் அவ்வப்போது தோற்றம் பெறும் தேவைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய ஒப்பந்த அடிப்படையில் பொலிஸ் ஆணைக்குழுவுக்கு ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களும் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

### 4.1.1 நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழு பொருத்தமானது மற்றும் கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தகுதி பெற்றுள்ளது என்பதையும் உறுதிப்படுத்தல்.

- **வினைத்திறன்மிக்க மேற்பார்வை நிறுவனமொன்றாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவை மறுசீரமைத்தல்.**
  தேசிய பொலிஸ் ஆணைக்குழுவை மறுசீரமைக்குமாறு அரசியலமைப்புப் பேரவையினால் வேண்டிக்கொண்டதற்கு அமைய தாபன ரீதியான தேவைப்பாடுகளை இனம் காணும் பொருட்டு ஆணைக்குழு உறுப்பினர்கள் மற்றும் பிரிவுத் தலைவர்களுக்கு மத்தியில் கலந்துரையாடல் நடாத்தப்பட்டது. இங்கு தேவைப்படும் ஆளணி தொடர்பிலான திருத்தங்கள் மற்றும் தாபன ரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பிலும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.
- **ஆணைக்குழுவில் விசேட புலனாய்வுப் பிரிவை நிறுவுதல்**
  இலங்கைக்கான தேசிய மனித உரிமைகள் செயல் திட்டத்தின் பரிந்துரைகள் மற்றும் பல்வேறுபட்ட தரப்பினரின் வேண்டுகோள்களைக் கருத்திற்கொண்ட பின்னர்

தொழிற்துறை சிவில் உத்தியோகத்தர் ஒருவரின் தலைமையில் விசேட புலனாய்வுப் பிரிவொன்றை நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.
இந்த புதிய பிரிவின் பணி யாதெனில், பொலிஸ் உத்தியோகத்தர்களினால் புரியப்படும் சித்திரவதைகள் தொடர்பிலான பொதுமக்கள் முறைப்பாடுகள், பொலிஸ் ஆணைக்குழுவின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு உட்படும் உத்தியோகத்தர்களினால் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஆணைக்குழுவுக்கு செய்யப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை செய்வதாகும்.

ஆணைக்குழுவினால் அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ள படி பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக பொதுமக்களால் செய்யப்படும் ஏதேனும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆளணி உத்தியோகத்தர்களினால் விசாரணை மேற்கொள்ளப்படும். அவ்வாறே, ஆணைக்குழுவினால் நேரடியாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் பொலிஸ் உத்தியோகத்தர்களினால் புரியப்படும் துர்நடத்தைகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதோடு பொலிஸ் உத்தியோகத்தர்களினால் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக முன்வைக்கப்படும் முறைபாடுகள் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- **தொழில்முறையிலான ஆளணியினரை ஆட்சேர்த்தல்.**

ஆணைக்குழுவின் கடமைப் பொறுப்புக்கள் விரிவாக்கம் அடையும் போது தொழில்முறை ரீதியில் மற்றும் நிறைவேற்று தரத்திலான ஆளணியினரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கமைய பின்வரும் பிரதான பதவிகளுக்கு ஆளணியினர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

- நிர்வாக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஒருவரை ஆட்சேர்த்தல்.
- நிர்வாக, மேன்முறையீட்டு, தாபன மற்றும் ஒழுக்காற்றுப் பணிகளை மேற்கொள்வதற்கு பிரிவுத் தலைவர்களுக்கு உதவும் வகையில் இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த உதவிச் செயலாளர்கள் மற்றும் உதவிப் பணிப்பாளர்களை நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்த்தல்.
- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதற்காக ஆணைக்குழு செயலாளரினதும் தவிசாளரினதும் ஒருங்கிணைப்பின் கீழ் ஆணைக்குழுவின் தீர்மானங்களை உரிய முறையில் அறிக்கையிடுவதற்கு ஆணைக்குழு செயலாளரை நியமித்தல்.
- உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்கள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள ரீட் மனுக்கள் தொடர்பிலான கடமைகளை மேற்கொள்வதற்கும் துணைச் சட்டங்களை மீளாய்வு செய்வதற்கும் மேன்முறையீட்டு நியாய சபையில் உள்ள சிக்கலான வழக்குகளுக்கு தோற்றுவதற்கும் கொள்கை ரீதியான மற்றும் சட்ட ரீதியான விடயங்கள்

தொடர்பில் ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்கும் பொருட்டும் சட்ட உத்தியோகத்தர் ஒருவரை நியமித்தல்.

- **ஒன்றுசேர்ந்துள்ள கோவைகளின் நடவடிக்கைகளை நிறைவு செய்யும் பொருட்டு அனுபவமுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல்.**

2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புக்கான 19 ஆம் திருத்தத்தின் பின்னர் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகளவிலான கோவைகள் தொடர்பில் கொள்கை, சட்டம் மற்றும் மேன்முறையீட்டுப் பிரிவுத் தலைவர்களுக்கு உதவும் வகையில் துண்டு கூலி அடிப்படையில் ஆளணியில் சில உறுப்பினர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர்.

## 4.1.2. வினைத்திறன்மிக்க சேவையை வழங்கும் பொருட்டு மனிதவள முகாமைத்துவம்

ஆணைக்குழுவின் செயற்பணிகள் விரிவாக்கம் அடைந்த போது நிறைவேற்ற வேண்டியுள்ள பணிகள் அதிகம் என்ற காரணத்தினால் மேலதிக ஆளணியினரின் தேவை ஏற்பட்டது. இந்த ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்திக்கும் பொருட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துடன் அடிக்கடி கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

**தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஆளணி வெற்றிடங்கள் பற்றிய தகவல்கள் அட்டவணை 1 மூலம் காட்டப்பட்டுள்ளது**

அட்டவணை 1

| தொ. இல | பதவி | சேவை | அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | செயலாளர் | இ.நி.சே. விசேட தரம் | 01 | 01 |
| 2 | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | இ.நி.சே. தரம் I | 01 | -- |
| 3 | பணிப்பாளர் | இ.நி.சே. தரம் I | 03 | 01 |
| 4 | மேலதிக செயலாளர் | ஒப்பந்தம் | 01 | -- |
| 5 | மாகாணப் பணிப்பாளர் | ஒப்பந்தம் | 09 | -- |
| 6 | பணிப்பாளர் | ஒப்பந்தம் | 01 | -- |
| 7 | பிரதான கணக்காளர் | இ.க.சே தரம் III | 01 | -- |
| 8 | உதவி / பிரதிப் பணிப்பாளர் | இ.நி.சே.II/III | 09 | 07 |
| 9 | உதவிப் பணிப்பாளர் (ஊடக மற்றும் வெளியீட்டு) | இ.நி.சே. III | 01 | 01 |
| 10 | உதவிச் செயலாளர் | இ.நி.சே. III | 01 | -- |
| 11 | சட்ட உத்தியோகத்தர் | திணைக்கள | 01 | -- |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | குழுச் செயலாளர் | ஒப்பந்தம் | 01 | -- |
| 13 | நிர்வாக உத்தியோகத்தர் | அ.மு.உ. அதி உயர் தரம் | 01 | 01 |
| 14 | மொழி பெயர்ப்பாளர் சி/ஆ | மொழி. சே. | 01 | 01 |
| 15 | மொழி பெயர்ப்பாளர் சி/த | மொழி .சே. | 01 | 01 |
| 16 | தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | த.தொ.சே. | 01 | -- |
| 17 | ஊடக உத்தியோகத்தர் | திணைக்கள | 01 | -- |
| 18 | புலனாய்வு உத்தியோகத்தர் | திணைக்கள | 16 | -- |
| 19 | அரச முகாமைத்துவ உதவியாளர் | அ.மு.உ. | 40 | -- |
| 20 | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | த.தொ.சே. | 05 | -- |
| 21 | தரவுப் பதியுனர் | திணைக்கள | 01 | -- |
| 22 | சாரதி | சாரதி சேவை | 04 | -- |
| 23 | முச்சக்கர வண்டி சாரதி | திணைக்கள | 01 | -- |
| 24 | அலுவலக உதவியாளர் சேவை | அ.உ.சே. | 13 | -- |
| **மொத்தம்** | | | **117** | **14** |

- **தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஆளணியினரின் கடமைப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கூறலை ஒழுங்குபடுத்தல்.**

  ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தின் நிதியுதவிகளைப் பயன்படுத்தி அவர்களால் நியமிக்கப்படும் சுயாதீன ஆலோசகர் ஒருவர் மூலம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஆளணியினரின் தொழில் விபரப் பட்டியல் மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- **ஆளணியினரின் பயிற்சிக்காக பயிற்சி தேவைப்பாடுகள் மற்றும் மதிப்பீடொன்றை செய்தல்.**

  இலங்கையில் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கு உந்து சக்தியாக கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு நிதியுதவி கருத்திட்டங்களின் கீழ் ஆரம்பமாக கிடைக்கப்பெற்ற நிதியுதவியிலிருந்து பயிற்சி தேவைப்பாடுகள் மதிப்பீடு செய்யப்பட்டு அது தொடர்பான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஆளணியினரின் ஆற்றல்களை விருத்தி செய்தல் மற்றும் பொதுமக்கள் சேவைகளை வழங்குவதில் நிறுவனத்தை பயனுள்ள வகையில் விருத்தி செய்வது இந்த செயற்பாட்டின் இலக்காக காணப்பட்டது.

- **ஆளணியின் பயிற்சி மற்றும் அறிவுத் தரத்தை விருத்தி செய்தல்.**

I. குழுக்களை கட்டியெழுப்புதல், தலைமைத்துவம் மற்றும் பால்நிலை வேறுபாட்டை பிரபல்யப்படுத்தல் தொடர்பான பயிற்சி

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பிரதான அலுவலகம் மற்றும் மாகாண அலுவலகங்களின் 74 உத்தியோகத்தர்களுக்கு வஸ்கடுவ சிட்ரஸ் ஹோட்டலில் 2017.05.26,27 ஆகிய திகதிகளில் வதிவிட பயிற்சி செயலமர்வொன்று நடாத்தப்பட்டது. செயலமர்வின் உள்ளடக்கத்தில் தலைமைத்துவம், அபிவிருத்தி, குழுக்களை கட்டியெழுப்புதல், நல்லாளுகை போன்ற விடயப் பரப்புக்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இந்த செயலமர்வுகளுக்கான நிதி அனுசரணை USAID நிறுவனத்தினால் வழங்கப்பட்டது.

II. தேசிய பொலிஸ் ஆணைக்குழு சகல மட்டத்திலுமான ஆளணியினரின் அடிப்படைத் திறமைகளை விருத்தி செய்வதற்காக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்துடன் இணைந்து பயிற்சித் திட்டமொன்றை தயாரித்தல்.
இலங்கையில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான உந்துசக்தியாக கருத்திட்டத்தின் கீழ் உள்நாட்டு பயிற்சி நிறுவனங்களின் மூலம் ஒருங்கிணைப்புச் செய்ததன் மூலம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஆளணியினருக்கு பயிற்சி வழங்குவதற்காக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தின் ஒதுக்கீடுகளில் ஆரம்ப பங்கிலிருந்து நிதியைப் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது.
பணிகளின் எல்லைக்குள் விசேட பயிற்சி பாடநெறிகளாக உயர் பயிற்சி அமர்வுகள் உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டது.

III. இலங்கை பொலிஸ் ஆணைக்குழுவின் முக்கிய சேவைகளை வழங்குவதற்கான ஆற்றலை விருத்தி செய்வதற்காக சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் உதவி முகவர் நிறுவனத்துடன்(USAID) பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடப்பட்டது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பிரதான சேவைகளை வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்ட ஆளணியினரைப் பயிற்றுவிப்பதற்கு தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்ட சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் முகவராண்மைSDGAP கருத்திட்டத்தின் மூலம் நிதயுதவி வாக்களிக்கப்பட்டது. நடைமுறைச் சாத்தியமான பொலிஸ் நிர்வாகம் மற்றும் தகவல் அறியும் உரிமை போன்ற துறைகள் இந்த பயிற்சியின் போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

### 4.1.3 வினைத்திறனுள்ள சேவையை வழங்குவதற்காக அமைப்பு ரீதியான சாத்தியப்பாடுகளை வலுப்படுத்தல்

- சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்துடன் இணைந்து ஒத்துழைப்பு மற்றும் பங்குதாரர் தரப்பினர் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு தொழில்நுட்ப மற்றும் நிதிசார் உதவிகளை வழங்கினர். 2015/2016 வருடங்களில் எண்ணக்கரு ரீதியிலான மூன்று கருத்திட்டங்கள் 2017 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

அ. ஐரோப்பிய ஒன்றியம் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஊக்குவிக்கும் உதவிக் கருத்திட்டம்.

ஆ. ஐக்கிய நாடுகள் அமைப்பின் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நிதியத்தின் மூலம் நிதி ஏற்பாடு வழங்கப்படும் சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கான இயலளவுகளை வலுப்படுத்துவதற்கு உதவி வழங்குதல் மற்றும் இலங்கையின் இடப்பெயர்வு செயன்முறைக் கருத்திட்டம்.

இ. சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் முகவர் நிறுவனத்தின் மூலம் நிதி ஏற்பாடுகள் வழங்கப்படும் SDGAPகருத்திட்டம்.

**2017 ஆம் வருடத்தில் அபிவிருத்தி பங்குதாரர் தரப்பினர்களுடன் பின்வரும் விடயங்கள் தொடர்பில் கரந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.**

- தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் கொள்திறன் அபிவிருத்திக்கு வழங்க முடியுமான தொழில்நுட்ப உதவி தொடர்பான சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் முகவர் நிறுவனத்தின் பிரதிநிதிகளுடன் 2017.03.06 ஆம் திகதி கலந்துரையாடல் நடாத்தப்பட்டது.
- ஆசியப் பிராந்திய மன்றம், இடப்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியம் மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனம் ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் 2017.06.23 ஆம் திகதி கலந்துரையாடல் நடைப்பெற்றதோடு, அதன் போது பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

  i. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் சேவைகளை வினைத்திறனுடனும் வெளிப்படைத்தன்மையுடனும் பொறுப்புடனும் மக்களுக்கு வழங்கும் நோக்கில் அணைக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் நோக்கங்கள் தொடர்பில் ஆளணியினருக்கு அறிவூட்டல்.

  ii. பொதுமக்கள் முறைப்பாடுகள் விசாரணையை தொழில்முறை ரீதியிலும் பயனுள்ள வகையிலும் நிறைவேற்றும் பொருட்டு அந்தப் பிரவின் இயலளவுகளை அபிவிருத்தி செய்தல்.

  iii. ஆணைக்குழுவின் பிரதான அலுவலகத்தையும் மாகாண அலுவலகங்களையும் வலையமைப்புச் செய்து மாகாண அலுவலங்களை வலுப்படுத்துவதற்கு தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட பொதுமக்கள் முறைப்பாடுகள் முகாமைத்துவக் கட்டமைப்பொன்றை நிறுவுதல்.

  iv. தகவல் அறியும் சட்டம் தொடர்பில் அறிவூட்டும் பொருட்டு ஆளணியினருக்கு பயிற்சி அமர்வொன்றை ஒழுங்கு செய்தல்.

  v. இலங்கை பொலிஸில் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின் வலுப்படுத்துவதற்காக ஒழுங்கமைப்பு பகுப்பாய்வு செய்தல் மற்றும் பலவீனங்கள் மற்றும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய பிரிவுகளை அடையாளம் காணல்.

vi.

- **பிரதான பணியகங்களின் இயலளவுகளை விருத்தி செய்வதற்கு பௌதீக வளங்களை கையகப்படுத்தல்.**

  செலவு கூடிய மற்றும் பாரிய குறைபாடாக உள்ள தகவல் தொடர்பாடல் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு தேவையான பௌதீக வளங்களைக் கையகப்படுத்துவதற்கு சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனம்(USAID) ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியம் (UNDP) மற்றும் சர்வதேச இடப்பெயர்வு அமைப்பு (IOM) போன்ற அபிவிருத்தி உதவி நிறுவனத்துடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்வதற்கான முறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இயலளவுகளை விருத்தி செய்வதற்கு உதவி வழங்குவதற்கு மற்றும் இலங்கையின் இடப்பெயர்வு செயன்முறை தொடர்பான கருத்திட்டத்தின் கீழ் சர்வதேச இடப்பெயர்வு அமைப்பினால் வழங்கப்படும் மாகாண அலுவலகங்களை வலையமைப்புச் செய்யும் பொதுகமக்கள் முறைப்பாடுகள் முகாமைத்துவக் கட்டமைப்பு (PCMS) கருத்திட்டத்திற்கு வன்பொருட்களைப் பெற்றுக்கொள்ளல்,அசையா புகைப்படங்களை எடுக்கும் புகைப்படக்கருவி, வீடியோ புகைப்படக் கருவி மற்றும் கட்புல மற்றும் செவிப்புல தயாரிப்புக்களுக்கு ஏற்புடைய வன்பொருட்கள் போன்ற ஊடக உபகரணங்களை கையகப்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்துடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- **தொழில்நுட்ப இயலளவுகளை விருத்தி செய்தல்.**

  ஆணைக்குழுவின் பொதுமக்கள் முறைப்பாடுகள் பிரிவினது ஆளணியினரின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு மற்றும் முறைப்பாடுகள் விசாரணை செயன்முறையை வினைத்திறனாக்குவதற்கு தேவையான வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவராண்மை (USAID) குடிப்பெயர்வாளர்களுக்கான (IOM) மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தின் பிரதிநிதிகளுடன் வட்ட மேசைக் கலந்துரையாடல் நடாத்தப்பட்டது. இந்த அமர்வின் போது தகவல் முகாமைத்துவ கட்டமைப்பொன்றை நிறுவுவதற்கும் பணியகங்களுக்கு வசதிகள் மற்றும் உபகரணங்களை பெற்றுத்தருவதற்கும் கவனம் செலுத்தப்பட்டது.

### 4.1.4 பொலிஸ் முறைப்பாட்டு முறை தொடர்பில் சமூகத்திற்கு மத்தியில் நம்பிக்கையை அதிகரித்தல்.

- **தரப்பினர்களின் கருத்தறியும் அமர்வுகளை நடாத்துதல்.**
  **புத்திஜீவிகள் மற்றும் பொதுமக்களின் கருத்தறிதல்**

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் தொடர்பில் பொதுமக்களை அறிவூட்டுதல் மற்றும் பொலிஸ் சேவையின் சேவை நிலமைகளை மேம்படுத்தும் நோக்கில் நாடு முழுவதும் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்ட புத்திஜீவிகள் மற்றும் பொதுமக்கள் கருத்தறியும் அமர்வுகள் 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இதன் ஆரம்ப கருத்தறியும் அமர்வு 2017.12.09 ஆம் திகதி ஹொரண பிரதேச செயலகத்தை மையமாகக் கொண்டு நடாத்தப்பட்டதோடு அதற்கான நிதியுதவி ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தினால் வழங்கப்பட்டது. இந்த அமர்வில் அனைத்து கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சமூகத் தலைவர்கள் 67 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. சட்ட அமுலாக்கம் மற்றும் பொலிஸ் சேவையின் தரம் தொடர்பில் 05 தலைப்புக்களின் கீழ் அவர்களிடமிருந்து கருத்துக்கள் பெறப்பட்டன. மேலும், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் அவர்கள் அறிவூட்டப்பட்டனர். அன்றைய தினம் பி.ப. 2.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை இந்த செயலமர்வு வெற்றிகரமாக நடைப்பெற்றது.

- **தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் வெளிவாரி பிரவேசங்களின் இயலளவுகளை விருத்தி செய்தல்.**

  **தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு புதிய இணையத்தளம் ஒன்றை வடிவமைத்தல்**

  ''சமாதானத்தை கட்டியெழுப்புவதை முன்னெடுத்துச் செல்வதற்கான மறுசீரமைப்புக்களை செய்யும் பொருட்டு இயலளவுகளை வலுப்படுத்துவதற்கு உதவுதல் மற்றும் இலங்கையின் இடப்பெயர்வு செயன்முறைப் பற்றிய கருத்திட்டத்தின்'' கீழ் பொதுமக்கள் முறைப்பாடுகளை இலத்திரனியல் முறையில் மேற்கொள்வதற்கான வசதியுடன் புதிய இணையத்தளமொன்றை தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்காக வடிவமைப்பதற்கு தேவையான நிதியுதவி ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தினால் வழங்கப்பட்டது.

  **தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் சேவை பற்றிய பிரச்சார நிகழ்ச்சித்திட்டம்**

  ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தின் பங்களிப்புடன் பொதுமக்கள் முறைப்பாடுகள் பற்றிய பிரச்சார நிகழ்ச்சித்திட்டமொன்று தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. சகல இனங்களையும் இலக்காகக் கொண்டு தகவல் பத்திரம், குறும் படம் மற்றும் வேறு தொடர்பாடல் உத்திகள் மூலம் இதனை மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

<u>**பொலிஸ் படையின் தரமான சேவை அந்தஸ்தை மேம்படுத்தல்**</u>

- முறைப்பாடுகளை செயற்படுத்துவதற்கு இலங்கை பொலிஸ் சேவையில் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகங்களை மேம்படுத்தல்.
- சுற்றுலா பொலிஸ் சேவையை மேம்படுத்தல்

- ஆரம்ப விசாரணை மேற்கொள்ளல் தொடர்பில் பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு பயிற்சி அளித்தல்
- சுற்றாடல் பொலிஸ் சேவைகளை மேம்படுத்தல்
- ஆரம்ப விசாரணை மேற்கொள்ளல் தொடர்பில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு பயிற்சி அளித்தல்

### 4.1.5 **பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகங்களின் செயற்பாடுகளை மேம்படுத்தல்**

சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான தேவைப்பாடுகளை அடையாளம் காண்பது தொடர்பிலான கலந்துரையாடலொன்று பொலிஸ் ஆணைக்குழுவின் தவிசாளர், உத்தியோகத்தர்கள், பணியகத்தின் உத்தியோகத்தர்கள் ஆகியோரின் பங்கேற்புடன் 2017.01.11 ஆம் திகதி நடைப்பெற்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனத்தின் நிதியுதவி கிடைக்கப்பெற்றது.

### 4.1.6 **அபிவிருத்திகான நிதியுதவிகளை வழங்கும் குழுக்களுக்கு மத்தியில் மேற்கெள்ளப்பட்ட கலந்துரையாடல்கள்**

- தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் இயலளவை மேம்படுத்துவதற்கு வழங்க முடியுமான தொழில்நுட்ப உதவி தொடர்பில் அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனத்தின் பிரதிநிதிகளுடன் 2017.03.06 ஆம் திகதி நடைப்பெற்றது.
- விசேடமாக பொதுமக்கள் முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு ஆளணியினரின் வினைத்திறனை விருத்தி செய்வதற்கு வழங்க வேண்டிய வசதிகளை கண்டறியும் நோக்கில் ஐக்கிய அமெரிக்க நிதியுதவி நிகழ்ச்சித்திட்டம்,(USAID)ஐ.ஓ.எம். (IOM),யூ.எம்.டி.பி (UNDP)ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் வட்டமேசை கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆளணியினருக்கு பயிற்சிப் பாடநெறிகளை வழங்குதல், தகவல் முகாமைத்துவ கட்டமைப்பொன்றை தாபித்தல் மற்றும் ஏனைய பிரிவுகளுக்கு தேவையான உபகரண வசதிகளை செய்தல் போன்ற விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

### **4.1.7 சுற்றுலா பொலிஸின் நடவடிக்கைகளை விருத்தி செய்தல்**

சுற்றுலா பொலிஸின் நடவடிக்கைகளை விருத்தி செய்வதற்கு பயன்படுத்துவதற்கு முடியுமான முறைகள் மற்றும் நியதிகள் யாதென்பதை கண்டறிவதற்கு பொலிஸ் ஆணைக்குழுவின் தவிசாளர் உட்பட அதன் உத்தியோகத்தர்கள் மற்றும் சுற்றுலா பொலிஸ் பிரிவின் பணிப்பாளரின்

பங்கேற்புடன் 2017.02.03ஆம் திகதி கலந்துரையாடல் நடைப்பெற்றது. புதிய சுற்றலாப் பிரிவை நிறுவுதல், தேவையான ஆளணியை இணைத்துக்கொள்ளல், வாகனங்கள் மற்றும் தேவையான ஏனைய வசதிகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

**4.1.6 <u>தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தீர்மானங்கள் தொடர்பில் பிரஜைகளின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்கு தகவல்களை வழங்குதல்</u>**

தகவல் அறியும் உரிமைச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் தகவல் உத்தியோகத்தர் மற்றும் பெயரிடப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

2017 ஆம் ஆண்டு தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பொலிஸ் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பற்றிய விபரங்கள்

கிடைக்கப் பெற்ற தகவல் கோரிக்கைகள் - 50

- தகவல் வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கை - 31
- தகவல் மறுக்கப்பட்ட எண்ணிக்கை - 14
- தகவல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள எண்ணிக்கை - 05

**<u>4.1.7.அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய சட்டமுறையான அறிக்கையிடல்</u>**

- அரசியலமைப்பு பேரவைக்கு காலாண்டு அறிக்கைகளை சமர்ப்பித்தல்
- பாராளுமன்றத்திற்கும் அரசியலமைப்புப் பேரவைக்கும் வருடாந்த அறிக்கையிடல்
- 2017/2018 ஆண்டுக்கான செயல் திட்டத்தை இற்றைப்படுத்தல்

**4.1.1 களணி கங்கை இரு மருங்கிலும் சுற்றாடல் மாசடைவதை தடுத்தல்.**

- களணி கங்கை ஓரங்கள் நெடுகிலும் உள்ள பிரதேசங்களில் சூழல் மாசடைவைத் தடுப்பதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் நீண்டதொரு கலந்துரையாடல் மோதரை முதல் அவிசாவலை வரையிலான பொலிஸ் பிரிவுகளின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளரின் பங்கேற்புடன் 2017.01.13 ஆம் திகதி நடைப்பெற்றது.
- இந்தக் கருத்திட்டத்தின் கீழ் பாதுகாத்து அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய இடங்கள் மற்றும் அதற்காக பயன்படுத்த வேண்டிய வழிமுறைகள் யாவை என்பன பற்றி அடையாளம் காண்பதற்காக பொலிஸ் சுற்றாடல் பிரிவின் பணிப்பாளரின் அனுசரணையின் கீழ் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தவிசாளர், செயலாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் கலந்துகொண்ட அவதானிப்புச் சுற்றுலா 2017.02.19 ஆம் திகதி மோதரை முதல் ஹங்வெல்ல வரை நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் போது பியகம பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மர

நடுகை நிகழ்விலும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். சூழலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் அறிவித்தல் பதாகைகள் அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

- தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தவிசாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் சுற்றாடல் பிரிவு உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் விசேட கலந்துரையாடலொன்று 2017.03.20 ஆம் திகதி நடாத்தப்பட்டது.
- 2017.06.05 ஆம் திகதி உலக சுற்றாடல் தினத்தை கொண்டாடும் முகமாக மருத மரக் கன்றுகள் நடும் நிகழச்சித்திட்டம் மோதரை முதல் அவிஸ்ஸாவலை வரையிலான அந்தந்தப் பொலிஸ் நிலையங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டது. (மருத மரம் ஆற்றங்கரைகளின் தின்னலை தடுக்கக்கூடிய தாவரமாகும்.)
- ‘‘களணி கங்கையை அண்டிய சூழலை நாம் எவ்வாறு பாதுகாக்க வேண்டும்’’ எனும் தலைப்பில் மோதரை முதல் அவிசாவலை வரையிலான பாடசாலைப் பிள்ளைகளின் பங்கேற்புடன் பேச்சு, சித்திரம் மற்றும் கட்டுரைப் போட்டிகளை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது. பரிசளிப்பு வைபவத்தை மேல்மாகாண சபையின் அனுசரணையோடு நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**<u>ஹொரணயில் நடாத்தப்பட்ட முதலாவது பொதுமக்கள் கருத்தறியும்</u> நிகம்வின் போகு**



**பேராசிரியர் திரு. சிறி ஹெட்டிகே உரையாற்றுகின்றார்**



**பங்குபற்றியோரில் சிலர்**



குழுக் கலந்துரையாடல்கள்

<u>பொதுமக்கள் கருத்தறியும் தலைப்புக்கள் 05</u>

i. குற்றமும் குற்றத் தடுப்பும்
ii. பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான தொடர்புகள்
iii. சட்ட விரோதமான மதுபானங்கள் மற்றும் போதைப் பொருட்கள் உற்பத்தி, போக்குவரத்து மற்றும் வியாபாரம்
iv. பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான குற்றச் செயல்கள் மற்றும் வீட்டு வன்முறை
v. சூழலியல் ரீதியில் நடைபெறும் குற்றங்கள் மற்றும் ஒவ்வொரு பிரதேசத்திற்கும உரிய தனித்துவமான பிரச்சினைகள்

## 4.1.6 நிறைவேற்றப்பட்டுள்ள ஏனைய பணிகள்

- ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தின் நிதி ஒதுக்கீடுகளின் மூலம் தேசிய பொலிஸ் ஆணைக்குழு உத்தியோகத்தர்களின் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் கடமைப் பட்டியலை தயாரிப்பதற்கு அந்த நிதியத்தினால் நியமிக்கப்பட்ட ஆலோசகர் ஒருவரால் (Consultant)மேற்கொள்ளப்பட்டது.
- தலைமைத்துவ அபிவிருத்தி, குழுக்களை கட்டியெழுப்புதல் மற்றும் நல்லாட்சி தொடர்பான தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் மாகாண அலுவலகங்களின் உத்தியோகத்தர்கள் 74 பேருக்கு ஐக்கிய அமெரிக்க உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் (USAIDமூலம் 2017.05.26 – 27 ஆகிய இரண்டு தினங்களிலும் வதிவிட செயலமர்வு ஒன்று வஸ்கடுவ சிட்ரஸ் ஹோட்டலில் நடைபெற்றது.
- மோதரை முதல் அவிஸ்ஸாவலை வரையிலான களணி கங்கையின் இருமருங்கிலும் மரங்களை நடுவதற்கு சுற்றாடல் - பாதுகாப்பு பொலிஸ் பிரிவுகளுடன் இணைந்து வனப் பாதுகாப்புத் திணைக்களத்திடமிருந்து 1000 மருத மரக் கன்றுகளைப் பெற்றுக்கொண்டு ஏற்புடைய பொலிஸ் நிலையங்களுக்கு ஒப்படைத்தல்.
- 2017.06.23 ஆம் திகதி Asia Foundation, IOM, UNDP USAID போன்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் சிரேஷ்ட

உத்தியோகத்தர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலுக்கு அமைய பின்வரும் விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

i. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் நோக்கங்கள் தொடர்பில் ஆளணியினருக்கு அறிவூட்டும் பயிற்சி செயலமர்வொன்றை நடாத்தி பொதுமக்களுக்கு பொறுப்புடன் மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் மற்றும் அர்ப்பணிப்புடன் சேவையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

ii. தொழிற்துறை ரீதியாகவும் பயனுள்ள விதத்திலும் பொதுமக்கள் முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காக அந்தப் பிரிவின் கொள்திறனை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

iii. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பிரதான அனுலுவலகம் மற்றும் மாகாண அலுவலகங்களை தொடர்புபடுத்தி தகவல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல் மற்றும் அதனூடாக பொதுமக்கள் முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் விசாரணை செய்யும் நடவடிக்கைகளுக்காக மாகாண அலுவலகங்களை வலுப்படுத்தல்.

iv. தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பில் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டும் பொருட்டு பயிற்சியை வழங்குதல்.

v. இலங்கை பொலிஸின் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின் பலவீனங்களை இனம்காணல் மற்றும் விருத்தி செய்வதற்கான முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்ள பகுப்பாய்வொன்றை நடாத்துவதற்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு உதவி வழங்குதல்.

### 4.1.10. பொலிஸ் ஆணைக்குழுவின் பல்வேறுபட்ட துறைகள் 07 ஐ உள்ளடக்கி குழுக்களை அமைத்தல்.

தவிசாளரின் யோசனையொன்றுக்கு அமைய பொலிஸ் ஆணைக்குழுவினால் தேர்வு செய்யப்பட்ட 07 விடயப் பரப்புக்களின் கீழ் 07 குழுக்கள் 2017 ஆம் ஆண்டு ஜுலை மாதம் நிறுவப்பட்டுள்ளதோடு, அவை நிறுவப்பட்டதன் நோக்கம் சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பாக எழுந்துள்ள பாரதுாரமான பிரச்சினைகளுக்குரிய காரணங்கள் மற்றும் அவற்றுக்கு தீர்வுகளை கண்டறிந்து செயற்படுத்துவதாகும். ஆணைக்குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும் இந்த குழுக்களின் தலைவர்களாக செயற்படுகின்றனர்.

1. **மோட்டார் வாகனப் போக்குவரத்துப் பொலிஸ் மற்றும் சுற்றுலா பொலிஸ் தொடர்பான குழு –**

இந்தக் குழுவின் தலைவராக ஆணைக்குழுவின் தவிசாளரான திரு திலக் கொல்லுரே அவர்கள் கடமையாற்றுகின்றார். ஆணைக்குழுவின் சிரேஷ்ட

உத்தயோகத்தர்கள் மற்றும் ஏற்புடைய பொலிஸ் பிரிவுகளின் தலைவர்கள் மற்றும் இதற்கு ஏற்புடைய ஏனைய தரப்பினர்கள் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர். இதன் மூலம் போக்குவரத்துப் பொலிஸாரினால் தவறிழைக்கும் சாரதிகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும் முறையை நடைமுறைப்படுத்துவதற்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. **போதவஸ்து அபாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய குற்றங்கள் மற்றும் அதன் தாக்கங்கள் பற்றிய குழு –**

இக்குழுவின் தலைவராக ஆணைக்குழுவின் உறுப்பினர் என்டன் ஜெயநாதன் அவர்கள் செயற்படுகின்றார். அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை, தேசிய புகையிலை மற்றும் மதுபான அதிகாரசபை போன்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் போதைப்பொருள் பணியகத்தின் பொலிஸ் தலைவர்கள் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர். இதன் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு மத்தியில் போதைப் பொருட்கள் பரவுவதை தடுப்பதற்கு ஒன்றிணைந்த செயலணி ஒன்றை சகல தரப்பினரதும் பங்களிப்புடன் நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. சுற்றுலா பொலிஸ் பிரிவின் வினைத்திறனை விருத்தி செய்வதற்கு கட்டமைப்பு மாற்றங்களை ஏற்படுத்தல் மற்றும் சுற்றுலா பொலிஸ் நிலையங்களை புதிதாக ஆரம்பிப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

3. **திட்டமிடப்பட்ட குற்றச் செயல்கள் பற்றிய குழு –**

இக்குழுவின் தலைவராக ஆணைக்குழுவின் உறுப்பினர் திரு பிரேங் டி சில்வா அவர்கள் செயற்படுகின்றார். ஆணைக்குழுவின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் மற்றும் ஏற்புடைய பிரிவுகளின் சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் இக்குழுவில் உள்ளடங்குகின்றனர். இதன் மூலம் திட்டமிடப்பட்ட குற்றச் செயல்களை தடுப்பதை புலனாய்வு செய்தல் மற்றும் சட்ட ரீதியான நடவடிக்கைகளை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு தேவையான பயிற்சிகள் மற்றும் செயலாற்றுகையை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

4. **பொலிஸ் சேவையின் பெண்கள் ஆளிணி எண்ணிக்கை மற்றும் வீட்டு வன்முறை உள்ளிட்ட சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பிலான குற்றங்கள் பற்றிய குழு –**

இதன் கீழ் இணையத்தளத்துடன் தொடர்புடைய குற்றங்களை தடுப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு ஆண் பெண் பால்நிலை வேறுபாடு பற்றிய பொலிஸ் ஆணைக்குழு ஆளணி மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களை அறிவூட்டுவதற்கும் கூறுணர்வுள்ளவர்களாக செயலாற்றுவதற்கும் தேவையான பயிற்சி செயலமர்வுகளை நடாத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

இக்குழுவின் தலைவியாக ஆணைக்குழுவின் உறுப்பினர் திருமதி சாவித்திரி விஜேசேகர அவர்கள் கடமையாற்றுகின்றார். ஆணைக்குழுவின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள், சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின் பொலிஸ் பிரதானிகள் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

5. **பொலிஸ் மறுசீரமைப்பு, அமைப்பு பகுப்பாய்வு மற்றும்UNDP, USAIDமற்றும் IOMஅனுசரணையின் கீழ் உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய குழு -**

இதன் கீழ் பொலிஸ் சேவையின் தரத்தை அதிகரிக்கும் நோக்கில் அறிஞர் மற்றும் பொதுமக்கள் கருத்தறியும் கருத்திட்டங்கள் பல நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. ஆணைக்குழுவின் உறுப்பினர் திரு சிறி ஹெட்டிகே இக்குழுவின் தலைவராக கடமையாற்றுகின்றார். ஆணைக்குழுவின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் மற்றும் ஏற்புடைய உதவி நிறுவனங்களின் பிரதிநிதிகள் இக்குழுவில் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

**6. பொதுமக்கள் முறைப்பாடுகள் விசாரணை நிகழ்ச்சித்திட்டம் பற்றிய குழு-**

ஆணைக்குழுவின் தவிசாளர் திரு. பி.எச். மனதுங்க இக்குழுவின் தலைவராக செயற்படுகின்றார். பொதுமக்கள் முறைப்பாடுகள் விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் உள்ளிட்ட மாகாணப் பணிப்பாளர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் செயற்பாட்டாளர்கள் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

கணினி தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பிரதான அலுவலகம் மற்றும் மாகாண அலுவலகங்களை வலையமைப்புப் படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

7. **தாபன நடவடிக்கைகளை முறைமைப்படுத்தும் பொறிமுறைப் பற்றிய குழு**

ஆணைக்குழுவின் உறுப்பினர் திரு. வை.எல்.எம்.சவாஹிர் அவர்களின் தலைமையில் ஆணைக்குழுவின் சிரேஷ் உத்தியோகத்தர்ளைக் கொண்டு இக்குழு இயங்குகின்றது.

(பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளின் நியமனம், இடமாற்றம் மற்றும் அரச வர்த்தமானியில் பெயர் பிரசுரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் நடவடிக்கைகள் இதனுள் அடங்கும்) இக்குழு ஒரு மாதத்தில் இரு முறைக் கூடி பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரப் பரப்பின் கீழ் நடைமுறைப்படுத்த முடியுமான சிபாரிசுகளை ஆணைக்குழுவுக்கு முன்வைக்கின்றது.

## 4.2 பொதுசன முறைப்பாடுகள் விசாரணைப் பிரிவு(PCID)

பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நிறுவப்பட்டுள்ள பொலிஸ் ஆணைக்குழுவின் பிரதான அலுவலகத்திற்கு மேலதிகமாக அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய வகையில் பொதுமக்கள் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வதற்கு அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன. பணிப்பாளர் ஒருவரின் கீழ் இயங்கிவரும் இந்த அலுவலகத்திற்கு புலனாய்வு உத்தியோகத்தர் ஒருவரும் இணைப்புச் செய்யப்பட்டுள்ளார். ஏற்புடைய மாகாண அலுவலங்களின் முகவரிகள் மற்றும் தொலைப்பேசி இலக்கங்கள் பின்னிணைப்புI இல் குறிப்பிடப்பட்டுள்ளது.


**2017.12.31 ஆம் திகதிக்கு பொதுமக்கள் முறைப்பாடுகள் விசாரணைப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகள் பற்றிய தகவல்கள்**

**அட்டவணை2**

| **மாகாண அலுவலகம்** | **கிடைக்கப்பெற்ற முறைப்பபடுகளின் எண்ணிக்கை** | **விசாரணைகள் நிறைவு பெற்ற எண்ணிக்கை** | **விசாரணைகள் நடைபெற்ற வண்ணம் உள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை** | **வீதம் %** |
|---|---|---|---|---|
| தலைமை அலுவலகம் | 153 | 86 | 67 | 56 |
| மேல் மாகாணம் | 416 | 119 | 297 | 29 |
| மத்திய மாகாணம் | 147 | 83 | 64 | 56 |
| வடமேல் மாகாணம் | 104 | 85 | 19 | 82 |
| தென் மாகாணம் | 186 | 149 | 37 | 80 |
| வடமேல் மகாணம் | 87 | 53 | 34 | 61 |
| ஊவா மாகாணம் | 95 | 59 | 36 | 62 |
| சப்பிரகமுவ மாகாணம் | 61 | 44 | 17 | 72 |
| வடக்கு மாகாணம் | 57 | 31 | 26 | 54 |
| கிழக்கு மாகாணம் | 160 | 47 | 113 | 29 |
| **மொத்த எண்ணிக்கை** | 1466 | 756 | 710 | 52 |

2017 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்றுள்ள மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 1466 ஆகும். அவற்றில் 756 முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டு ஏற்புடைய தரப்பினர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. 710 முறைப்பாடுகளின் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

அட்டவணை -I




**நிறைவேற்றப்பட்டுள்ள ஏனைய பணிகள்**

- பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக கிடைக்கப்பெற்ற பொதுமக்கள் முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் 29 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளல்.

- பொதுமக்கள முறைப்பாடுகளை விசாரணை செய்யும் முறைமை தொடர்பாகஇல2047/22. மற்றும் 2017.11.28 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (பின்னிணைப்புII)

- பொதுமக்கள் முறைப்பாடுகள் விசாரணைப் பிரிவுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள விசாரணை உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு முறையொன்றை தயாரித்தல்.

- UNDP நிதி உதவியின் கீழ் விசாரணை உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பொலிஸ் ஆணைக்குழு உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

## 4.3. தாபன மற்றும் ஒழுக்காற்றுப் பிரிவு

சகல தரங்களிலுமுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம், சேவை உறுதிப்படுத்தல், சேவை நீடிப்பு வழங்குதல், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் ஓய்வுபெறுகையுடன் தொடர்புடைய சகல விடயங்கள் தொடர்பிலும் கொள்கைகளை தயாரித்தல் இந்தப் பிரிவுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. அரச வர்த்தமானியில் பெயர் பிரசுரிக்கப்படாத உத்தியோகத்தர்கள் தொடர்பிலான அதிகாரங்கள் பொலிஸ்மா அதிபருக்கு கையளிக்கப்பட்டுள்ளதோடு, பிரிவின் சகல செயற்பாடுகளும் ஆணைக்குழுவின் வழிகாட்டல் மற்றும் கொள்கைத் தீர்மானத்திற்கு அமைய நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

அரச வர்த்தமானியில் பெயர் பிரசுரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் நியமனம், பதவி உயர்வு,இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு நடவடிக்கைகள் நேரடியாக இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அந்த நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு ஆணைக்குழுவுக்கு உதவுகின்றது. அவ்வாறே பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளின் நியமனம் மற்றும் இடமாற்றங்கள் நேரடியாக ஆணைக்குழுவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக சகல பொலிஸ் உத்தியோகத்தர்களினாலும் பொலிஸுக்கு எதிரான முறைப்பாடுகள் தொடர்பிலும் புலனாய்வுகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

## 2017 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பணிகள்

## அட்டவணை -3

| தொ .இல | விபரம் | 1 ஆம் காலாண்டு | 2 ஆம் காலாண்டு | 3 ஆம் காலாண்டு | 4 ஆம் காலாண்டு |
|---|---|---|---|---|---|
| | **தாபன நடவடிக்கைகள்** | | | | |
| 01 | **ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு :** | | | | |
| | i. பி.பொ.ப. – உ.பொ.அ. ஆக பதவி உயர்வு | 57 | -- | 02 | - |
| | ii. உ.பொ.அ. - பொ.அ.ஆக பதவி உயர்வு (ஆண்) | 05 | 01 | 05 | 02 |
| | iii. உ.பொ.அ. - பொ.அ.ஆக பதவி உயர்வு (பெண்) | 08 | -- | -- | - |
| | iv. பொ.அ.- சி.பொ.அ. ஆக பதவி உயர்வு | 03 | 01 | -- | 01 |
| | v. சி.பொ.அ. – பி.பொ.மா.அ. ஆக பதவி உயர்வு | 08 | 01 | 12 | 26 |
| | vi. பி.பொ.மா.அ.- சி.பி.பொ.மா.அ. ஆக பதவி உயர்வு | 01 | -- | 03 | - |
| 02 | பதவி உயர்வு மற்றும் முற்தேதியிடல் மேன்முறையீடுகள் | | | | |
| | **I.பெயர் பிரசுரிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள்:** | | | | |
| | * கிடைக்கப்பெற்ற மேன் முறையீடுகளின் எண்ணிக்கை | 15 | 32 | 36 | - |
| | * பொலிஸ்மா அதிபரிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ள அறிக்கைகளின் எண்ணிக்கை | -- | 10 | 05 | - |
| | II. **பெயர் பிரசுரிக்கப்படாத உத்தியோகத்தர்கள்** | | | | |
| | *கிடைக்கப்பெற்ற மேன் முறையீடுகளின் எண்ணிக்கை | 75 | 65 | 144 | 203 |
| | * பொலிஸ்மா அதிபரிடம் முன்னளிக்கப்பட்டுள்ளவை | 65 | 65 | 80 | 194 |
| | * அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ள எண்ணிக்கை | 30 | 20 | 30 | 123 |
| | * நிறைவு செய்யப்பட்டுள்ள எண்ணிக்கை | 08 | 08 | 05 | 79 |
| 03 | **இடமாற்றம்** | | | | |
| | I.**பெயர் பிரசுரிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள்:** | | | | |
| | * உ.பொ.அ. (ஆண்) | 08 | 32 | 25 | 18 |
| | * உ.பொ.அ. (பெண்) | 04 | -- | -- | - |
| | * பொலிஸ் அத்தியட்சகர் | 13 | 06 | 13 | 13 |
| | * சி.பொ.அத்தியட்சகர் | 09 | 02 | 05 | 07 |
| | * பிரதி பொலிஸ்மா அதிபர் | 05 | 11 | 12 | 04 |
| | * சி. பிரதி பொலிஸ்மா அதிபர் | -- | 03 | 03 | - |
| | II.**பெயர் பிரசுரிக்கப்படாத உத்தியோகத்தர்கள்** | | | | |
| | • பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளை நியமித்தல் மற்றும் இடமாற்றம் | 58 | 91 | 136 | 92 |
| | • மேன்முறையீட்டுச் சபையினால் மேற்கொள்ளப்படும் இடமாற்றங்களின் எண்ணிக்கை | 584 | -- | -- | - |
| 04 | **பல்வேறுபட்ட** | | | | |
| | **I. பெயர் பிரசுரிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள்:** | | | | |
| | • பதவி நிரந்தரமாக்கல் மற்றும் தகுதிகூர்நிலைக் காலத்தை நீடித்தல் | 18 | 14 | 08 | 09 |
| | • ஓய்வு பெறுகை | 10 | 05 | 13 | 13 |
| | • வெளிநாட்டு விடுமுறை | 02 | 03 | | 05 |
| | • மீண்டும் சேவையில் அமர்த்தல் | -- | 01 | 02 | 01 |
| | **II. பெயர் பிரசுரிக்கப்படாத உத்தியோகத்தர்கள்** | | | | |
| | • ஓய்வு பெறுகை | 12 | -- | - | - |
| | • மேன்முறையீடுகள் தொடர்பில் பொலிஸ்மா அதிபரிடம் அறிக்கை கோரப்பட்டுள்ள எண்ணிக்கை | 16 | -- | -- | - |
| | III. **பொலிஸுக்கு எதிராக பொலிஸ் உத்தியோகத்தர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள்** | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | • கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை<br>• பொலிஸ்மா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை<br>• நிறைவு செய்யப்பட்டுள்ள எண்ணிக்கை<br>• நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கொண்டிருப்பவை | 47<br>47<br>14<br>-- | 17<br>17<br>39<br>-- | 25<br>25<br>--<br>209 (2016 முதல்) | 52<br>51<br>09<br>- |
| 05 | **ஒழுக்காற்று நடவடிக்கைகள்:**<br><br>**பெயர் பிரசுரிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள்**<br>• கிடைக்கப்பெற்றுள்ள ஒழுக்காற்றுக் கோவைகள்<br>• ஒழுக்காற்றுக் கட்டளைகள் வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கை<br>• நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் எண்ணிக்கை | 43<br>09<br>192 | 06<br>58<br>156 | 17<br>06<br>151 | 14<br>26<br>137 |
| 06. | **பெயர் பிரசுரிக்கப்படாத உத்தியோகத்தர்கள்**<br><br>• கிடைக்கப்பெற்றுள்ள ஒழுக்காற்றுக் கோவைகள்<br>• நிறைவு செய்யப்பட்டுள்ள எண்ணிக்கை<br>• நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் எண்ணிக்கை | --<br>--<br>-- | 14<br>08<br>59 | 97<br>03<br>100 | 33<br>04<br>99 |
| 07. | **அரசியல் பழிவாங்கல்களுக்கு நிவாரணம் வழங்குதல்**<br>• கிடைக்கப்பெற்றுள்ள எண்ணிக்கை<br>• நிவாரணம் வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கை (ஓய்வுபெற்ற)<br>(2016.12.31 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்பட்டுள்ளது )<br><br>அரசியல் ரீதியில் அநீதிக்கு உட்பட்ட சிலர் நீதிமன்ற நடவடிக்கைகளை நாடியுள்ளதால் மேல் நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபரின் அறிவுரைப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | 129<br>05 | 129<br>-- | 129<br>-- | 129<br>28 |
| 08. | **1 ஆம் காலாண்டு** | ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டத்தை தயாரித்தல்<br>I. இலங்கை பொலிஸ் சேவையில் அரச வர்த்மானியில் பிரசுரிக்கப்படாத உத்தியோகத்தர் வகுதிகள் 50 இல் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன.<br><br>**ii**.அரச வர்த்மானியில் பிரசுரிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டத்தை திருத்தி பொலிஸ்மா அதிபரின் இணக்கத்தைப் பெற்றுக்கொள்ளல் | | | |
| | **2ஆம் காலாண்டு** | i. பி.பொ.மா. அதிபர் பதிவிக்கு பதவி உயர்த்துவதற்கு நேர்முகப் பரீட்சை சபையில் புள்ளி வழங்கும் திட்டமொன்றை உள்ளடக்கிய திட்டமொன்றைத் தயாரித்தல்.<br><br>ii.2016 ஆம் ஆண்டில் உ.அபா.அத்தியட்சகர்கள் 20 பேரை ஆட்சேர்ப்பதற்கு புள்ளி வழங்கும் திட்டமொன்றைத் தயாரித்தல்.<br><br>iii. உதவிச் சேவைகள் தொழில் வல்லுநர்கள் மற்றும் மருத்துவர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு தொடர்பாக நடவடிக்கை எடுத்தல். | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | **3ஆம் காலாண்டு** | i.அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளின் வருடாந்த இடமாற்றம் தொடர்பில் 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 01 ஆம் திகதி தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் சுற்றுநிருபம் ஒன்றை வெளியிடல்.<br>(இல. 2017/01)<br><br>ii.ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டக் கோவைகள் 98 தற்போது தயாரிக்கப்பட்ட வண்ணம் உள்ளன.<br><br>iii.உச்ச நீதியமன்றம் மற்றும் நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபையில் விசாரிக்கப்படும் தாபன மற்றும் ஒழுக்காற்று பிரிவுக்குரிய வழக்குகள் பற்றிய அவதானிப்புரைகள் மற்றும் சிபாரிசுகளை வழங்குதல். | |
| | **4ஆம் காலாண்டு** | 01. ஆட்சேர்ப்புத் திட்டங்கள் 20 க்கு ஏற்புடையதாக ஆணைக்குழுப் பத்திரங்கள் 04 தாயரித்தல்.<br><br>02. பிரதி பொலிஸ்மா அதிபர் பதவிக்கு பதவி உயர்த்துவதற்காக நேர்முகப் பரீட்சை சபையில் புள்ளி வழங்கும் திட்டத்தை தயாரித்தல்.<br><br>03. 2016 ஆம் ஆண்டு திறந்த போட்டிப் பரீட்சையில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு புள்ளி வழங்கும் திட்டமொன்றை தயாரித்தல்.<br><br>04. உச்ச நீதியமன்றம் மற்றும் நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபையில் விசாரிக்கப்படும் 18 வழக்குகள் பற்றிய அவதானிப்புரைகள் மற்றும் சிபாரிசுகளை வழங்குதல்.<br><br>05. பொலிஸ் உத்தியோகத்தர்களின் செயலூக்கமுள்ள சேவைக் காலத்தை பொருள் கோடுவது தொடர்பில் அவதானிப்புக்களை வழங்குதல்.<br><br>06. முறையற்ற குறிப்புக்கள் தொடர்பில் சிபாரிசுகள் மற்றும் அவதானிப்புக்களை சமர்ப்பித்தல்.<br><br>07. உதவிச் சேவை தொழில் வல்லுநர்கள் மற்றும் மருத்துவர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல். | |

## 4.4 கொள்கை, சட்டம் மற்றும் மேன்முறையீட்டுப் பிரிவு

**இந்தப் பிரிவு பணிப்பாளர் ஒருவரின் தலைமையில் இயங்கி வருவதோடு, உதவிப் பணிப்பாளர்கள் 4 பேர் இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர். இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் பணிகள்**

(i) புதிய கொள்கைகளை அறிமுகம் செய்தல், கொள்கை வகுப்பாக்கம், பொலிஸ் சேவையின் மேம்பாட்டுக்காக அவற்றைப் பயன்படுத்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்தல். பொதுமக்கள் மற்றும் பொலிஸாருக்கு இடையில் உறவை ஏற்படுத்துவதற்காக கொள்கைகளை தயாரித்தல் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடைய பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குதல்.

**(ii)** சட்ட ஏற்பாடுகளின் கீழ் அதிகாரத்தை கையளித்தல், சட்ட திட்டங்களை நாளதுவரைப்படுத்தல் போன்ற பணிகள்.

**(iii)** புதியபொலிஸ் ஆணைக்குழு தாபிக்கப்பட்ட போது கிடப்பிலிருந்த மேன்முறையீடுகள் மற்றும் பதவி வெறிதாக்கல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு பொலிஸ்மா அதிபரின் சிபாரிசுக்கு எதிராக கிடைக்கப்பெற்றிருந்த மேன்முறையீடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபை மற்றும் பாராளுமன்ற பொதுமனுக்குழு ஆகிய நிறுவனங்களில் ஆணைக்குழுவை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துகொள்ளல். அவ்வாறே அடிப்படை உரிமைகள் மற்றும் ரீட் கட்டளைகள் தொடர்பில் சட்டமா அதிபரின் அறிவுரைகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

**கொள்கை, சட்டம் மற்றும் மேன்முறையீட்டுப் பிரிவினால் 2017 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பணிகள்**

| | |
|---|---|
| 2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நிறைவுபெறாத ஒழுக்காற்றுக் கோவைகளின் எண்ணிக்கை- | 1288 |
| 2017 ஆம் வருடத்தில் புதிதாக கிடைக்கப்பெற்ற ஒழுக்காற்று மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | 691 |
| 2017 ஆம் ஆண்டில் தீர்மானம் வழங்கப்பட்ட எண்ணிக்கை (ஒழுக்காற்று) | 593 |
| ** மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்ட, நிராகரிக்கப்பட்ட, பொலிஸ்மா அதிபரிடம் முன்னளிக்கப்பட்ட எண்ணிக்கை | 557 |
| 2017 ஆம் வருடத்தின் ஆரம்பத்தில் நிறைவுபெறாத மீண்டும் சேவையில் அமர்த்தும் கோவைகளின் எண்ணிக்கை | 1428 |
| 2017 ஆம் ஆண்டில் புதிதாக கிடைக்கப்பெற்ற மீண்டும் சேவையில் அமர்த்தல் தொடர்பான மேன்முறையீடுகள் | 969 |
| 2017 ஆம் ஆண்டில் தீர்மானம் வழங்கப்பட்ட எண்ணிக்கை (மீண்டும் சேவையில் அமர்த்துதல்) | 625 |
| ** மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்ட, நிராகரிக்கப்பட்ட, பொலிஸ்மா அதிபரிடம் முன்னளிக்கப்பட்ட எண்ணிக்கை | 803 |
| 2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்த நிறைவுற்றிருக்காத AATகோவைகளின் எண்ணிக்கை | 277 |
| 2017 ஆம் ஆண்டில் AAT கோவைகளின் எண்ணிக்கை | 247 |

| | |
|---|---|
| 2017 ஆம் வருடத்தில் நடவடிக்கைகள் நிறைவுசெய்யப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை | 55 |
| அவதானிப்புக்கள்/ எழுத்துமூல அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட எண்ணிக்கை | 218 |
| 2017 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இருந்த நிறைவுற்றிராத உயர் நீதிமன்ற/மேன்முறையீட்டு நீதிமன்ற கோவைகளின் எண்ணிக்கை | 133 |
| 2017 ஆம் ஆண்டில் உயர் நீதிமன்றத்தில் /மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 15 |
| அவதானிப்புக்கள் வழங்கப்பட்ட எண்ணிக்கை | 32 |

## 4.5 நிதிப் பிரிவு

மீளாய்வுக்குரிய வருடத்தில் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உரிய செயற்பாட்டுக்கு தேவையான நிதியங்கள் திரட்டு நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்காக பொது திறைசேரியுடன் தொடர்புகளைப் பேணிய வண்ணம் நிதி ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் கணக்குப் பிரிவினால் நிதி மற்றும் கணக்குகீட்டு நடவடிக்கைகள் பேணப்படுகின்றன.நிதி மற்றும் ஒதுக்கீடுகள் முகாமைத்துவம், செலவுக் கட்டுப்பாடு, பொருட் பதிவேட்டுப் பொருட்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் காகிதாதிகள் என்பவற்றை வழங்கல் செய்வது இந்தப் பிரிவின் செயற்பாடாகும். அத்துடன் பிரதான அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள 09 மாகாண அலுவலகங்களின் தேவைப்பாடுகளையும் நிறைவு செய்கின்றது.அத்தோடு ஆணைக்குழுவின் பல்வேறு வகுதிகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான சம்பளம் மற்றும் பல்வேறுபட்ட கொடுப்பனவுகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதும் இப்பிரிவின் பணிகளுக்குள் அடங்கும். உத்தேச வெளிநாட்டு உதவிகள் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் மேற்பாவை நடவடிக்கைகள் மூலம் இப்பிரிவை வலுப்படுத்துவதற்கு ஆணைக்குழு எதிர்பார்க்கின்றது. 2017 ஆம் ஆண்டின் நிதி நிலமை அட்டவணை 4 மூலம் காட்டப்பட்டுள்ளது.

## தேசிய பொலிஸ் ஆணைக்குழு – 2017 ஆம் ஆண்டின் நிதி நிலமை

**அட்டவணை 4**

| செலவுத் தலைப்பு | விடயம் | அனுமதிக்கப்பட்ட மொத்த ஒதுக்கீடு | மொத்தச் செலவினம் 2017.01.01 முதல் 2017.12.31 வரை |
|---|---|---|---|
| | **மீண்டெழும் செலவுகள்** | **97,196,000.00** | 94,722,953 |
| | **ஆளுக்குரிய வேதனாதிகள்** | | |
| 1001 | சம்பளமும் வேதனமும் | **23,500,000.00** | 21,970,477 |
| 1002 | மேலதிக மற்றும் விடுமுறை நாள் சம்பளம் | **300,000.00** | 271,468 |
| | வேறு கொடுப்பனவுகள் | | |
| 1003 | 11 திரட்டு நிதியம் | **19,500,000.00** | 19,327,089 |
| 1003 | 21விசேட சட்ட சேவைகள் | **9,500,000.00** | 9,180,367 |
| | | **52,800,000.00** | **50,749,401** |
| | **பிரயாணச் செலவு** | | |
| 1101 | உள்நாட்டு | **200,000.00** | 184,498 |
| 1102 | வெளிநாட்டு | **50,000.00** | 43,830 |
| | **வழங்கல்கள்** | | |
| 1201 | காகிதாதிகளும் அலுவலக தேவைகளும் | **1,370,000.00** | 1,362,140 |
| 1202 | எரிபொருள் | **1,400,000.00** | 1,398,805 |
| 1203 | உணவு பானங்கள் மற்றும் சீருடைகள் | **20,000.00** | 20,000 |
| | **பராமரிப்புச் செலவுகள்** | | |
| 1301 | வாகனம் | **800,000.00** | 798,667 |
| 1302 | இயந்திரங்களும் உபகரணங்களும் | **180,000.00** | 168,831 |
| 1303 | கட்டிடங்களும் நிர்மாணிப்புக்களும் | **50,000.00** | 43,045 |
| | **சேவைகள்** | | |
| 1401 | போக்குவரத்து | **3,000,000.00** | 3,000,000 |
| 1402 | தபால் மற்றும் தொலை தொடர்பு | **2,000,000.00** | 1,883,514 |
| 1403 | நீரும் மின்சாரமும் | **6,676,000.00** | 6,567,520 |
| 1404 | வரிகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கான வரிகள் | **22,300,000.00** | 22,194,916 |
| 1409 | வேறு | **5,880,000.00** | 5,847,437 |
| | **மாற்றீடுகள்** | | |
| 1506 | அரச ஊழியர்களின் ஆதனக் கடன் வட்டி | **470,000.00** | 460,349 |
| | | **44,396,000.00** | **43,973,551** |

| | | | |
|---|---|---|---|
| | **மூலதன செலவுகள்** | **3,930,000.00** | **2,531,803** |
| | **மூலதனச் சொத்துக்களின் புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி** | | |
| 2002 | இயந்திரங்களும் உபகரணங்களும் | **80,000.00** | 0 |
| 2003 | வாகனம் | **150,000.00** | 0 |
| | **மூலதனச் சொத்துக்களை கைப்பற்றல்** | | |
| 2102 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | **1,400,000.00** | 1,343,478 |
| 2103 | இயந்திரங்களும் உபகரணங்களும | **1,000,000.00** | 844,800 |
| | **அறிவு விருத்தி** | | |
| 2401 | அறிவு விருத்தி மற்றும் அலுவலக அபிவிருத்தி | **200,000.00** | 200,000 |
| | **UNDP கருத்திட்டம்** | | |
| 2509 | வேறு | **1,100,000.00** | 143,526 |
| | **முழு மொத்தம்** | **101,126,000.00** | **97,254,756** |

## பின்னிணைப்பு I

**மாகாண பணிப்பாளரின் பெயர் மற்றும் தற்போதைய அலவலக முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள்**

| மாகாண பணிப்பாளரின் பெயர் மற்றும் தற்போதைய அலவலக முகவரி | பெயர் | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| பணிப்பாளர் (பொதுசன முறைப்பாடுகள்)<br>தேசிய பொலிஸ் ஆணைக்குழு,<br>இல 09 கட்டிடம்,<br>BMICH வளாகம்,<br>பௌத்தாலோக்க மாவத்தை,<br>கொழும்பு 07. | திரு.<br>டபிள்யு.ஏ.டி.பி.லக்ஷ்மன் | 0115107725 |
| பணிப்பாளர் (மேல் மாகாணம்)<br>தேசிய பொலிஸ் ஆணைக்குழு,<br>இல 09 கட்டிடம்,<br>BMICH வளாகம்,<br>பௌத்தாலோக்க மாவத்தை,<br>கொழும்பு 07. | திரு. ஏ.ஜீ.தர்மதாஸ | 0115107730 |
| பணிப்பாளர்(வடக்கு மாகாணம்) வடக்கு மாகாண அலுவலகம்,<br>தேசிய பொலிஸ் ஆணைக்குழு<br>மாவட்ட செயலகம், யாழ்பாணம். | கலாநிதி திரு. கே. தியாகராஜா | 0215107722 |
| பணிப்பாளர்(மத்திய மாகாணம்), வடமத்திய மாகாண அலுவலகம்<br>தேசிய பொலிஸ் ஆணைக்குழு,<br>மாவட்டச் செயலகம், அநுராதபுரம் | திரு. கே.பீ.<br>ஹெட்டியாரச்சி | 0255107722 |
| பணிப்பாளர்(தென் மாகாணம்), தேசிய பொலிஸ் ஆணைக்குழு,<br>முதலாம் மாடி, மாவட்டச் செயலகம், காலி. | திரு பி.எச்.விமலரத்ன | 0915107722 |
| பணிப்பாளர் (மத்திய மாகாணம்)இமத்திய மாகாண அலுவலகம்,<br>தேசிய பொலிஸ் ஆணைக்குழு,<br>மாவட்டச் செயலகம், கண்டி. | திரு. கே.கெகுலந்தர | 0815107722 |
| பணிப்பாளர் (சப்ரகமுவ மாகாணம்) சப்ரகமுவ மாகாண அலுவலகம், தேசிய பொலிஸ் ஆணைக்குழு, மாவட்டச் செயலகம், புதிய நகரம் இரத்தினபுரி. | திரு பி.கொடிதுவக்கு | 0455107722 |
| பணிப்பாளர்(ஊவா மாகாணம்)ஊவா மாகாண அலுவலகம்,<br>தேசிய பொலிஸ் ஆணைக்குழு,பிரதிப் பிரதான செயலாளர் அலுவலகம், பொறியியல் சேவை,<br>பிங்அராவ, பதுளை | திரு. ரி.எம்.டபிள்யு.<br>தென்னகோன் | 0555107722 |
| பணிப்பாளர்(வடமேல் மாகாணம்) வடமேல் மாகாண அலுவலகம், தேசிய பொலிஸ் ஆணைக்குழு,அறை இலக்கம் 08,03 ஆம் மாடி, வீவெஸ் கடைத் தொகுதி, இலக்கம் 04 மிகிந்து மாவத்தை, குருநாகல் | திரு. டபிள்யு.எம்.<br>ஜயவர்தன | 0375107722 |
| பணிப்பாளர்(கிழக்கு மாகாணம்), கிழக்கு மாகாண அலுவலகம், தேசிய பொலிஸ் ஆணைக்குழு,<br>மாவட்டச் செயலகம், மன்முனை வடக்கு, மட்டக்களப்பு. | திரு. ஏ.ரவீந்திரன் | 0655107722 |